கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல. / මගේ අංකය / My No.: சுற்றுநிருப இல: 2015/13
உமது இல / ඔබේ අංකය / Your No.:
திகதி / දිනය / Date: 27-11-2015

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
வடக்கு மாகாணம்.

## தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் பாடசாலைகளுக்கிடையேயான வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்கள்

பாடசாலைகளுக்கிடையே தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்களாகப் பின்வரும் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்துவததற்கு எதிர்பார்க்கப் படுகின்றது

### 1. பாசத்தின் பள்ளிக்கூடம் (Senahasaka Thaksalawa) :

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், ஒருநாள் பங்குபற்றும் ஆசிரியர்களுக்கு தமது வகுப்பறையிலும் பாடசாலையிலும் தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்குமான தேவைகளை அடையாளம் காண உதவுவதோடு, மாணவர்களின் பங்களிப்போடு இது தொடர்பான கல்வி அனுபவங்களைப் பெறக்கூடிய சந்தர்ப்பங்களும் வழங்கப்படும். இந்நிகழ்வில் பங்குபற்றும் சகல ஆசிரியர்களிடையேயும் தேசிய ஒற்றுமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான தேவையினையும் அபிப்பிராயத்தினையும் கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படுவதோடு, அது தொடர்பான கலந்துரையாடலை ஏற்படுத்துவதற்குத் தேவையான சந்தர்ப்பம் பெற்றுத்தரப்படும். எனவே, இந்நிகழ்ச்சித் திட்டமானது, பல்வேறு தொனிப்பொருள் மற்றும் பல்வேறு செயற்பாடுகள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2. இரு நகர நண்பர்கள் (Denuwara Mithuro):

இது வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய மாவட்டங்களில், மாணவர்கள் பங்களிப்போடு அவர்களுக்கிடையில் பிணைப்புக்களை கட்டியெழுப்ப உதவும் நிகழ்ச்சித் திட்டமாகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தினூடாக, தலைமைத்துவம் மற்றும் ஆளுமை என்பவற்றை விருத்தி செய்வதோடு, ஒற்றுமை மற்றும் சகவாழ்வு தொடர்பான கருத்துக்களை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களை பாடசாலை மட்டத்தில் செயற்படுத்துவதன் மூலம் இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வும் நட்பும் கட்டியெழுப்பப்பட்டு, உறுதியான தேசிய நல்லிணக்கம் உருவாகும்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்களுக்கு ஒரு வருடத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடாத்துவதற்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உத்தேசித்துள்ளது. இதன்மூலம் சமூக பன்முகத்தன்மை, அதனை வரப்பிரசாதமாகக் கொண்டு சமூகத்தில் வாழவேண்டிய முறைமை, அதன்மூலம் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றினை மேம்படுத்துவது தொடர்பில், அவர்களை அறிவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு பல்வேறு செயற்பாடுகள் உள்ளடக்கப்படுவதோடு, சகல மாணவ, மாணவிகளுக்கிடையேயும் புரிந்துணர்வு மற்றும் நட்பினைக் கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படுகின்றது.



செயலாளர் / ලේකම් / Secretary: 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office: 021-3202704 (Admn.) 021-3202568 (Dev.) 021-3202281 (Plan.) 021-3202309 (Acct.) 021-7390665 (DSW)
தொலைநகலி / ෆැක්ස් / Fax: 021-2220794

நிகழ்ச்சித் திட்ட மாதிரி அமைப்பு – ஒரு வருட கால வரையறைக்குள்

- ❖ அரைநாள் - முன் அறிமுகம்
- ❖ 3 நாட்கள் - பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம்
- ❖ 3 நாட்கள் - பின் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம்
- ❖ 3 நாட்கள் - பங்குபற்றும் பாடசாலைகளின் ஒருமைப்பாடு

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

இ.இரவீந்திரன்,
செயலாளர்

பிரதி:

1. கௌரவ. கல்வி அமைச்சர்,
   வடக்கு மாகாணம்.

2. ஆளுநரின் செயலாளர்,
   வடக்கு மாகாணம்.

3. பிரதம செயலாளர்,
   வடக்கு மாகாணம்.